இ.ஊ.சா.பு.ஆ சுற்றுநிருப இல : 01/ 2024

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய
சார்த்துதல்களைப் புலனாய்வு
செய்வதற்கான ஆணைக்குழு,
இல. 36, மலலசேகர மாவத்தை
கொழும்பு 07 .
27.02.2024.

**2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின்**
**பிரிவு 80 (1) இன் கீழ் சொத்துக்களையும் பொறுப்புக்களையும்**
**வெளிப்படுத்துதலுடன் தொடர்புடைய நபர்கள் மற்றும்**
**பொறுப்பேற்கும் நிறுவனத் தலைவர்களுக்கு,**

## 2023ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் பிரகாரம் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்துதல்

1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்துதல் தொடர்பான சட்டம் 2023ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் பிரகாரம் நீக்கப்பட்டுள்ளதுடன் ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 79 ஆவது பிரிவிலிருந்து 92 ஆவது பிரிவு வரை சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்துதல் தொடர்பான விதிமுறைகள் உள்ளீர்க்கப்பட்டுள்ளன.

2. அதன் அடிப்படையில் மத்தியமயப்படுத்தப்பட்ட இலத்திரனியல் முறைமையொன்றை ஸ்தாபித்து அதன் மூலம் சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்துதல்களை பெற்றுக் கொள்ளல் மற்றும் பரிசீலனைக்குற்படுத்தும் பொறுப்பு இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

3. ஆணைக்குழுவின் மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ள மத்தியமயப்படுத்தப்பட்ட இலத்திரனியல் முறைமையொன்றின் உருவாக்கத்திற்கான பரீட்சார்த்த வேலைகளை நிறைவு செய்து புதிய சட்டத்தின் அடிப்படையிலான சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்துதல்களை பெற்றுக் கொள்வதற்கான முறைமையை உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கும் வரைக்கும் இங்கு **இணைப்பு I** இல் உள்ள மாதிரி படிவத்திற்கு ஏற்ப, இதுவரைக் காலமும் சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்துதல்களை பெற்றுக் கொள்ளல் மற்றும் பேணிப்பாதுகாத்தலுடன் தொடர்புடைய நிறுவனத்தலைவர்களின் கட்டுப்பாட்டிலேயே இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் சார்பில் மேற்படி வெளிப்படுத்தல்களை பேணிப்பாதுகாத்து அதனுடன் தொடர்புடைய செயற்பாடுகளை முன்னெடுக்குமாறு ஆணைக்குழுவினால் இத்தால் கட்டளை இடப்படுகின்றது.

4. மேற்படி சட்டத்தின் பிரிவு **80(1)** கீழ் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்த வேண்டிய நபர்கள் **இணைப்பு II,** முதலாவது நிரலிலும், உரிய நபர்கள் தங்களுடைய சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்துதல்களை யாரிடன் கையளிக்க வேண்டும் என்பது தொடர்பில் **இணைப்பு II இன்** இரண்டாவது நிரலிலும், உள்ளீர்க்கப்பட்டுள்ளது.

5. சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்துதல்களை சமர்ப்பிக்க வேண்டும் என்பது தொடர்பில் **இணைப்பு II இன்** இரண்டாவது நிரலில் உள்ளீர்க்கப்பட்டுள்ள நபர்கள் தொடர்பில் பின்வரும் விடயங்களை கருத்திற் கொள்ளவும்:-

(i) வெளிப்படுத்தல்களின் இரகசியத்தன்மையைப் பாதுகாக்கும் விதத்தில் வெளிப்படுத்தல்கள் பெறப்பட்டு அவை பாதுகாப்பாக வைக்கப்படல் வேண்டும்.

(ii) சட்டத்தின் 82வது பிரிவின்படி **இணைப்பு III** இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி குறிப்பிட்ட காலத்திற்குள் வெளிப்படுத்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படுதல்;

(iii) வெளிப்படுத்தல்களை பெற்றுக்கொண்டமையை உறுதிப்படுத்தும் வகையில் பொருத்தமான நடைமுறைகளை முன்னெடுத்தல்.

(iv) வெளிப்படுத்தல்களை சமர்ப்பிப்பதுடன் தொடர்புடைய குறித்த பதிவேட்டை முறையாக பராமரித்து, குறிப்பிட்ட காலப்பகுதியில் வெளிப்படுத்தல்களை சமர்ப்பித்த மற்றும் சமர்ப்பிக்காத நபர்களின் பட்டியலை, சமர்ப்பிக்க வேண்டிய உரிய திகதிக்கு பின்னர் உடனடியாக ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்தல்;

(v) ஆணைக்குழுவின் அனுமதியின்றி, அந்தந்த நிறுவனங்களின் தலைவரிடம் வெளிப்படுத்தல்களைச் சமர்ப்பித்ததைத் தொடர்ந்து, எந்தவொரு நபரும் அவ்வெளிப்படுத்தல்களைச் அணுகுவதைத் தடுத்தல்;

(vi) ஆணைக்குழுவின் கோரிக்கையின் பேரில், உரிய வெளிப்படுத்தல்களை தாமதமின்றி ஆணைக்குழுவிற்கு வழங்குவது குறித்த பொறுப்பினை முன்னெடுக்கும் நிறுவனத்தலைவரின் பொறுப்பாகும்: மற்றும்

(vii) சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்துதல் தொடர்பான மாதிரி படிவங்கள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.ciaboc.gov.lk இல் பதிவிறக்கம் செய்து கொள்ள முடிவதுடன் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளில் ஏதாவது ஒன்றில் வெளிப்படுத்தல்களைச் சமர்ப்பிக்கலாம்.

**ஆணைக்குழுவின் கட்டளைப்படி,**

**பணிப்பாளர் நாயகம்,**
இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப்
புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு,

**இணைப்பு I**

# சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்துதல் (2023ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டம்)

1. முதலெழுத்துக்களுடன் பெயர்:-

2. தேசிய அடையாள அட்டை இல:-

3. வரி செலுத்துனர் அடையாளப்படுத்தல் இல (TIN):-

4. நிறுவனம்:-

1. முழுப்பெயர் : ....................................................................................................

2. அலுவலக முகவரி: ....................................................................................................

3. தனிப்பட்ட முகவரி: ....................................................................................................

4. பதவிப் பெயர் / தொழில் : ..............................................................................

5. திணைக்களத்தின் / நிறுவனத்தின் / அரசியற்கட்சியின் பெயர் : ..............................
..........................................................................................
..........................................................................................

6. அ. மாத வேதனம்: ....................................................................................................

ஆ. மொத்த மாதாந்தப் படிகள் : ..............................................................................

7. திருமணமானவரெனின் வாழ்கைத் துணையின் பெயர்: ......................................
..........................................................................................

8. வாழ்க்கைத் துணை தொழில்புரிபவராயின் தொழிலிடமும் மாத வேதனமும் படிகளும் } ..............................................
..............................................

9. பிள்ளைகள் எவரேனுமிருப்பின், அவர்களின் பெயர்களும் வயதும் :

..................................................................
..................................................................
..................................................................
..................................................................
..................................................................
..................................................................
..................................................................
..................................................................

**பாகம் “அ “**

**2023ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 81 ஆவது பிரிவின் கீழ் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல்**

**(சகல வெளிப்படுத்துனர்களாலும் பூரணப்படுத்தப்படுதல் வேண்டும்)**

1. உமக்காக, உமது வாழ்க்கைத் துணைக்காக, அல்லது உமது பிள்ளைகளுள் * எவருக்காகவும் ஏதேனும் ஆதனத்தை எவரேனுமொருவர் நம்பிக்கைப்பொறுப்பில் வைத்திருக்கின்றீரா? அவ்வாறெனின் பெயர், விஸ்தீரணம், அமைவிடம், ஆதனத்தின் நிலைமை மற்றும் கொள்ளப்பட்ட திகதி என்பன பற்றியும் முழு விபரங்களையும் தருக.

   ......................................................................................................................................

   ......................................................................................................................................

   ......................................................................................................................................

2. நீர், உமது வாழ்க்கைத் துணை அல்லது உமது பிள்ளைகளுள் * எவரும் ஏதேனும் ஆதனத்தை எவரேனுமொருவருக்காக நம்பிக்கைப் பொறுப்பில் வைத்திருக்கின்றீர்களா? அவ்வாறெனில், மேலே 1ல் கேட்கப்பட்டுள்ளவாறான முழு விபரங்களையும் தருக

   ......................................................................................................................................

   ......................................................................................................................................

   ......................................................................................................................................

3. வருமான வரிக் கோப்பு இலக்கம்: ......................................................................................

4. உமக்கு, உமது வாழ்க்கைத் துணைக்கு அல்லது உமது பிள்ளைகளுள் * எவருக்கும் அஞ்சல் அலுவலகச் சேமிப்பு வங்கியும் தேசிய சேமிப்பு வங்கியும் உட்பட, இலங்கையில் அல்லது வெளிநாட்டில் உள்ள எவையேனும் வங்கிகளில் ( நடைமுறைக் கணக்குகள்இ சேமிப்பு கணக்குகள், நிலையான வைப்புக்கள் முதலிய) எவையேனும் கணக்குகள் உண்டா? அவ்வாறெனில்இ குறிப்பிடுக

| வங்கியின் பெயரும் முகவரியும் | கணக்கு வைத்திருப்பவரின் பெயர் | கணக்கு இலக்கம் | கணக்குத் ஆரம்பிக்கப்பட்ட திகதி | விதிக்கப்பட்ட திகதியிலிருந்த மீதி |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

5. நீர் உமது வாழ்க்கைத் துணை அல்லது உமது பிள்ளைகளுள்* எவரும் சேமிப்புச் சான்றிதழ்களில் வரி ஒதுக்குச் சான்றிதழிகளில் அல்லது அரசாங்கப் பிணைப் பத்திரங்களில் ஏதேனும் பணத்தை முதலீடு செய்திருக்கிறீர்களா? அவ்வாறெனில், குறிப்பிடுக

| சான்றிதழ் வைத்திருப்பவரின் பெயர் | சான்றிழ்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட திகதியும் இடமும் | முதலீட்டுத் தொகை |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

6. நீர் உமது வாழ்க்கைத் துணை அல்லது உமது பிள்ளைகளுள்* எவரும், எவரேனும் தனியாளுக்கு, ஏதேனும் கம்பனிக்கு அல்லது பங்குடமைக்கு வாக்குறுதி பத்திரங்கள் மீது, காசோலைகள் மீது அல்லது வேறு பிணைப்பொறுப்பின் மீது அல்லது அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை அடைமானம் வைத்ததன் மீது ஏதேனும் பணத்தைக் கடன் கொடுத்திருக்கிறீர்களா ? அவ்வாறெனில் குறிப்பிடுக

| கடன் வாங்கியவரின் பெயரும் முகவரியும் | கடன் வழங்கப்பட்ட திகதியும் தொகையும் | வட்டி வீதம் | உறுதியின் இலக்கமும் திகதியும் | நொத்தாரிசின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

7. நீர் உமது வாழ்க்கைத் துணை அல்லது உமது பிள்ளைகளுள்* எவரும், எவையேனும் பங்குத் தொகுதிகள், பங்குகள் அல்லது தொகுதிக்கடன் பத்திரங்களை வைத்திருக்கிறீர்களா? அவ்வாறெனில் குறிப்பிடுக.

| பங்குடைமையாளரின் பெயர் | கம்பனியின் பெயரும் முகவரியும் | வைத்திருக்கப்படும் பங்குகளின் எண்ணிக்கை | கொள்வனவுத் திகதி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

8. நீர் உமது வாழ்க்கைத் துணை அல்லது உமது பிள்ளைகளுள்* எவரும், ஏதேனும் தொழில் முயற்சியில் ஏதேனும் பணத்தை முதலீடு செய்திருக்கிறீர்களா? அவ்வாறெனில், அத்தகைய முதலீடு பற்றிய முழு விபரங்களையும் தருக.

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

9. நீர் உமது வாழ்க்கைத் துணை அல்லது உமது பிள்ளைகளுள்* எவருக்கும் வெளிநாட்டில் எவையேனும் சொத்துக்கள் உண்டா? அவ்வாறெனில், அந்த நாட்டின் பெயரையும் அத்தகைய சொத்துக்களின் தன்மையினையும் முதலீட்டுத் திகதியையும் குறிப்பிடுக.

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

10. விதிக்கப்பட்ட திகதியன்று உம்மிடமுள்ள அல்லது வேறு எவரேனும் ஆளின் கட்டுக்காப்பிலுள்ள உமது காசு விபரங்களைத் தருவதுடன் அத்தொகையினையும் அத்தகைய ஆளின் பெயரையும் முகவரியையும் குறிப்பிடுக.

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

11. உமக்கு, உமது வாழ்க்கைத் துணை அல்லது உமது பிள்ளைகளுள்* எவருக்கும் ஏதேனும் வங்கியில் பாதுகாப்பான வைப்பு பெட்டகம் உள்ளதா? அவ்வாறெனில் வங்கியின் பெயரையும் முகவரியையும் அத்தகைய பெட்டகம் வாடகைக்குப் பெறப்பட்ட திகதியையும் அத்துடன் அதிலிருந்தவற்றையும் குறிப்பிடுக.

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

12. நீரோ, உமது வாழ்க்கைத் துணையோ அல்லது உமது பிள்ளைகளில்* எவருமோ நகைகளை (பட்டைதீட்டப்பட்ட அல்லது பட்டைதீட்டப்படாத) விலையுயர்ந்த கற்களை, தங்கத்தை அல்லது வெள்ளியைச் சொந்தமாக அல்லது உடமையாக வைத்திருக்கிறீர்களா? அவ்வாறெனின், அத்தகைய பொருட்களின் விபரங்களைத் தருக.

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

13. உமக்கு, உமது வாழ்க்கைத் துணையோ அல்லது உமது பிள்ளைகளில்* எவருக்கும் எவையேனும் மோட்டார் வாகனங்கள், மோட்டார் படகுகள் அல்லது விசையினால் இயங்கும் வேறு வாகனங்கள் சொந்தமாக கொண்டுள்ளீர்களா? அவ்வாறெனில் குறிப்பிடுக.

| வாகனத்தின் வகை | வர்த்தக பெயர் | பதிவு செய்யப்பட்ட இலக்கம் | கொள்வனவுத் திகதி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

14. விதிக்கப்பட்ட திகதியன்று உம்மிடம், உமது வாழ்க்கைத்துணையிடம் அல்லது பிள்ளைகளுள்* எவரிடமும் சொந்தமாக கொண்டிருந்த அல்லது உடமையாக வைத்திருந்த சகல அசையா ஆதனங்களினதும் முழு விபரங்களையும் தருக.

| காணியின் பெயர் | அமைவிடம் | யாரால் கொள்ளப்பட்டது | யாரிடமிருந்து கொள்ளப்பட்டது | எவ்வாறு கொள்ளப்பட்டது (நன்கொடையா அல்லது கொள்வனவா) | உறுதியின் திகதியும் இலக்கமும் | நொத்தாரிசின் பெயர் | கமத்தொழிற் காணியா அல்லது வெற்றுக்காணியா |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |

கமத்தொழில் ஆதனம் தொடர்பில் பின்வரும் விபரங்களைத் தருக.

| காணியின் பெயர் | வளர்கப்படும் பயிரின் தன்மை (தேயிலை, இறப்பர் முதலியன) | ஏக்கர் அளவு | | | உம்மால் நிருமாணிக்கப்பட்ட கட்டிடங்களின் தன்மை |
|---|---|---|---|---|---|
| | | முதிர்ந்தது | முதிராதது | பயிரிடப்படாதது | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

வீட்டு ஆதனம் தொடர்பில் குறிப்பிடுக.

| காணியின் பெயர் | மதிப்பீட்டு இலக்கம் | பெறப்பட்ட வாடகை | | நிருமாணத்திகதி |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

15. நீர் உமது வாழ்க்கைத் துணை அல்லது உமது பிள்ளைகளுள்* எவரும் ஏதேனும் பணம் கடன் வாங்கியிருக்கிறீர்களா? அவ்வாறெனில் குறிப்பிடுக.

| கடனாகப் பெறப்பட்ட தொகை | அத்தகைய கடன் வாங்கிய திகதி | எந்நிறுவனத்திடமிருந்து அல்லது எவ்வாளிடமிருந்து கடன் பெறப்பட்டதோ அந்நிறுவனத்தின் அல்லது அவ்வாளின் பெயரும் முகவரியும் | அளிக்கப்பட்ட பிணைப் பொறுப்பு | உறுதியின் திகதியும் இலக்கமும் நொத்தாரிசின் பெயரும் | விதிக்கப்படட திகதியன்று கொடுக்க வேண்டிய கடன் தொகை |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

## பாகம் “ஆ”

**வெளிப்படுத்துகையொன்றைச் செய்வதற்கு முதலில் தேவைப்படுத்தப்பட்ட திகதியன்று உள்ளவாறான சொத்துக்கள், பொறுப்புக்கள் பற்றிய வெளிப்படுத்துகை (வருடாந்த வெளிப்படுத்துகையை செய்கின்ற ஆட்களினால் மட்டுமே பூரணப்படுத்தப்பட்ட வேண்டியது)**

1. உமக்காக உமது வாழ்க்கைத் துணைக்காக அல்லது உமது பிள்ளைகளுள் * எவருக்காகவும் ஏதேனும் ஆதனத்தை எவரேனுமொருவர் நம்பிக்கைப்பொறுப்பில் வைத்திருந்தீர்களா? அவ்வாறெனின் பெயர், விஸ்தீரணம், அமைவிடம், ஆதனத்தின் நிலைமை மற்றும் கொள்ளப்பட்ட திகதி என்பன பற்றிய முழு விபரங்களையும் தருக.

   ......................................................................................................................................
   ......................................................................................................................................
   ......................................................................................................................................

2. நீர், உமது வாழ்க்கைத் துணை அல்லது உமது பிள்ளைகளுள் * எவரும் ஏதேனும் ஆதனத்தை எவரேனுமொருவருக்காக நம்பிக்கை பொறுப்பில் வைத்திருந்தீர்களா? அவ்வாறெனில், மேலே 1ல் கேட்கப்பட்டுள்ளவாறான முழு விபரங்களையும் தருக.

   ......................................................................................................................................
   ......................................................................................................................................
   ......................................................................................................................................

3. வருமான வரிக் கோப்பு இலக்கம்...........................................................................................................

4. உமக்கு, உமது வாழ்க்கைத் துணை அல்லது உமது பிள்ளைகளுள் * எவருக்கும் அஞ்சல் அலுவலகச் சேமிப்பு வங்கியும் தேசிய சேமிப்பு வங்கியும் உட்பட இலங்கையில் அல்லது வெளிநாட்டில் உள்ள எவையேனும் வங்கிகளில் ( நடைமுறைக் கணக்குகள், சேமிப்பு கணக்குகள், நிலையான வைப்புக்கள் முதலிய) எவையேனும் கணக்குகளை வைத்திருந்தீர்களா? அவ்வாறெனில், குறிப்பிடுக

| வங்கியின் பெயரும் முகவரியும் | கணக்கு வைத்திருப்பவரின் பெயர் | கணக்கு இலக்கம் | கணக்கு ஆரம்பிக்கப்பட்ட திகதி | விதிக்கப்பட்ட திகதியிலிருந்த மீதி |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

5. நீர் உமது வாழ்க்கைத் துணை அல்லது உமது பிள்ளைகளுள்* எவரும் சேமிப்புச் சான்றிதழ்களில் , வரி ஒதுக்குச் சான்றிதழிகளில் அல்லது அரசாங்கப் பிணைப் பத்திரங்களில் ஏதேனும் பணத்தை முதலீடு செய்திருந்தீர்களா? அவ்வாறெனில், குறிப்பிடுக

| சான்றிதழ் வைத்திருப்பவரின் பெயர் | சான்றிதழ்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட திகதியும் இடமும் | முதலீட்டுத் தொகை |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

6. நீர் உமது வாழ்க்கைத் துணை அல்லது உமது பிள்ளைகளுள்* எவரும், எவரேனும் தனியாளுக்கு, ஏதேனும் கம்பனிக்கு அல்லது பங்குடமைக்கு வாக்குறுதி பத்திரங்கள் மீது, காசோலைகள் மீது அல்லது வேறு பிணைப்பொறுப்பின் மீது அல்லது அசையா ஆதனத்தை அடைமானம் வைத்ததன் மீது ஏதேனும் பணத்தைக் கடன் கொடுத்திருக்கிறீர்களா ? அவ்வாறெனில் குறிப்பிடுக

| கடன் வாங்கியவரின் பெயரும் முகவரியும் | கடன் வழங்கப்பட்ட திகதியும் தொகையும் | வட்டி வீதம் | உறுதியின் இலக்கமும் திகதியும் | நொத்தாரிசின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

7. நீர் உமது வாழ்க்கைத் துணை அல்லது உமது பிள்ளைகளுள்* எவரும், எவையேனும் பங்குத் தொகுதிகளை, பங்குகளை அல்லது தொகுதிக்கடன் பத்திரங்களை வைத்திருந்தீர்களா? அவ்வாறெனில் குறிப்பிடுக.

| பங்குடமையாளரின் பெயர் | கம்பனியின் பெயரும் முகவரியும் | வைத்திருக்கப்படும் பங்குகளின் எண்ணிக்கை | கொள்வனவுத் திகதி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

8. நீர் உமது வாழ்க்கைத் துணை அல்லது உமது பிள்ளைகளுள்* எவரும், ஏதேனும் தொழில் முயற்சியில் ஏதேனும் பணத்தை முதலீடு செய்திருக்கிறீர்களா? அவ்வாறெனில், அத்தகைய முதலீடு பற்றிய முழு விபரங்களையும் தருக.

......................................................................................................................................

......................................................................................................................................

......................................................................................................................................

......................................................................................................................................

......................................................................................................................................

......................................................................................................................................

......................................................................................................................................

......................................................................................................................................

9. நீர் உமது வாழ்க்கைத் துணை அல்லது உமது பிள்ளைகளுள்* எவருக்கும் வெளிநாட்டில் எவையேனும் சொத்துக்கள் இருந்ததா? அவ்வாறெனில், அந்த நாட்டின் பெயரையும் அத்தகைய சொத்துக்களின் தன்மையும் முதலீட்டுத் திகதியையும் குறிப்பிடுக

......................................................................................................................................

......................................................................................................................................

......................................................................................................................................

......................................................................................................................................

......................................................................................................................................

......................................................................................................................................

......................................................................................................................................

......................................................................................................................................

10. விதிக்கப்பட்ட திகதியன்று உம்மிடமிருந்த அல்லது வேறு எவரேனும் ஆளின் கட்டுக்காப்பல் இருந்த உமது காசு விபரங்களைத் தருவதுடன் அத்தொகையும் அத்தகைய ஆளின் பெயரையும் முகவரியையும் குறிப்பிடுக.

......................................................................................................................................

......................................................................................................................................

......................................................................................................................................

......................................................................................................................................

......................................................................................................................................

......................................................................................................................................

......................................................................................................................................

......................................................................................................................................

......................................................................................................................................

11. உமக்கு, உமது வாழ்க்கைத் துணைக்கு அல்லது உமது பிள்ளைகளுள்* எவருக்கும் ஏதேனும் வங்கியில் பாதுகாப்பான வைப்பு பெட்டகமொன்று இருந்ததா?

அவ்வாறெனில் வங்கியின் பெயரையும் முகவரியையும் அத்தகைய பெட்டகம் வாடகைக்குப் பெறப்பட்ட திகதியையும் அத்துடன் அதிலிருந்தவற்றையும் குறிப்பிடுக.

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

12. நீரோ, உமது வாழ்க்கைத் துணையோ அல்லது உமது பிள்ளைகளில்* எவருமோ நகைகளை (பட்டைதீட்டப்பட்ட அல்லது பட்டைதீட்டப்படாத) விலையுயர்ந்த கற்களை, தங்கத்தை அல்லது வெள்ளியைச் சொந்தமாக அல்லது உடமையாக வைத்திருந்தீர்களா? அவ்வாறெனின், அத்தகைய பொருட்களின் விபரங்களைத் தருக.

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

13. உமக்கு, உமது வாழ்க்கைத் துணையோ அல்லது உமது பிள்ளைகளில்* எவருக்கும் எவையேனும் மோட்டார் வாகனங்கள், மோட்டார் படகுகள் அல்லது விசையினால் இயங்கும் வேறு வாகனங்கள் சொந்தமாகவிருந்தனவா? அவ்வாறெனில் குறிப்பிடுக.

| வாகனத்தின் வகை | வர்த்தகப் பெயர் | பதிவு செய்யப்பட்ட இலக்கம் | கொள்வனவுத் திகதி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

14. விதிக்கப்பட்ட திகதியன்று உம்மிடம், உமது வாழ்க்கைத்துணையிடம் அல்லது பிள்ளைகளுள்* எவரிடம் சொந்தமாகவிருந்த அல்லது உடமையாகவிருந்த சகல அசையா ஆதனங்கள் பற்றிய முழு விபரங்களையும் தருக.

| காணியின் பெயர் | அமைவிடம் | யாரால் கொள்ளப்பட்டது | யாரிடமிருந்து கொள்ளப்பட்டது | எவ்வாறு கொள்ளப்பட்டது (நன்கொடையா அல்லது கொள்வனவா) | உறுதியின் திகதியும் இலக்கமும் | நொத்தாரிசின் பெயர் | கமத்தொழிற் காணியா அல்லது வெற்றுக்காணியா |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |

கமத்தொழில் ஆதனம் தொடர்பில் பின்வரும் விபரங்களைத் தருக.

| காணியின் பெயர் | வளர்க்கப்படும் பயிரின் தன்மை (தேயிலை, இறப்பர் முதலியன) | ஏக்கர் அளவு | | | உம்மால் நிருமாணிக்கப்பட்ட கட்டிடங்களின் தன்மை |
|---|---|---|---|---|---|
| | | முதிர்ந்தது | முதிராதது | பயிரிடப் படாதது | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

வீட்டு ஆதனம் தொடர்பில் குறிப்பிடுக

| காணியின் பெயர் | மதிப்பீட்டு இலக்கம் | பெறப்பட்ட வாடகை | | நிருமாணத்திகதி |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

15. நீர் உமது வாழ்க்கைத் துணை அல்லது உமது பிள்ளைகளுள்* எவரும் ஏதேனும் பணம் கடன் வாங்கியிருந்தீர்களா? அவ்வாறெனில் குறிப்பிடுக.

| கடனாகப் பெறப்பட்ட தொகை | அத்தகைய கடன் வாங்கிய திகதி | எந்நிறுவனத்திடமிருந்து அல்லது எவ்வாளிடமிருந்து கடன் பெறப்பட்டதோ அந்நிறுவனத்தின் அல்லது அவ்வாளின் பெயரும் முகவரியும் | அளிக்கப்பட்ட பிணைப் பொறுப்பு | உறுதியின் திகதியும் இலக்கமும் நொத்தாரிசின் பெயரும் | விதிக்கப்படட திகதியன்று கொடுக்க வேண்டிய கடன் தொகை |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

……………………………………………………………………………… ஆகிய நான், இதன் கண் என்னால் தரப்பட்டுள்ள பதில்களும் அளிக்கப்பட்டுள்ள கூற்றுக்களும் உண்மையானவை என்றும் செம்மையானவை என்றும், இத்தால் பயபக்தியாகவும் நேர்மையாகவும் உண்மையாகவும் வெளிப்படுத்துவதுடன் அவ்வாறே உறுதியும்/ சத்தியமும் செய்கிறேன்.

……………………..

கையொப்பம்

20……….. ஆம் ஆண்டு …………மாதம் …………..ஆம் நாளாகிய இன்று …………………… என்னுமிடத்தில் என் முன்னிலையில் சத்தியம் / உறுதி செய்யப்பட்டது.

…………………………..

சத்திய ஆணையாளர்/ சமாதான நீதிவான்

*** இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக:**

2023ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 81 ஆம் பிரிவின் கீழ் இப்பாகம் ஏற்புடையதாகின்ற ஒவ்வோராளும், (இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில் "சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப்படுத்துகை" ஒன்றெனக் குறிப்பீடு செய்யப் படும்) பின்வரும் எல்லாமும் பற்றிய வெளிப்படுத்துகையொன்றை, 82 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கச் செய்தல் வேண்டும்:-

(அ) அவரது சொத்துக்களும் பொறுப்புக்களும்;

(ஆ) அவரது வாழ்க்கைத்துணையின் சொத்துக்களும் பொறுப்புக்களும்;

(இ) அவரில் தங்கிவாழும் பிள்ளைகளின் வயதுகளைப் பொருட்படுத்தாது, அப்பிள்ளைகள் ஒவ்வொருவரின் சொத்துக்களும் பொறுப்புக்களும்;

(ஈ) அவரில் தங்கிவாழும் வேறு எவரேனும் ஆட்களின் வயதுகளைப் பொருட்படுத்தாது, அவ்வாட்களின் சொத்துக்களும் பொறுப்புக்களும்; அத்துடன்

(உ) இப்பாகம் ஏற்புடையதாகின்ற ஆளுடன் வேறு எவரேனுமாள் பரஸ்பர உரிமைகளையும் கடப்பாடுகளையும் பகிர்ந்துகொள்ளுமிடத்துத் தவிர, வெளிப்படுத்துகைத் தேதிக்கு ஆகக்குறைந்தது ஆறு மாதங்களுக்கு முன்னர், இப்பாகம் ஏற்புடையதாகின்ற ஆளுடன் கூடிவாழ்ந்து பொதுவான வீட்டைப் பகிர்ந்து கொள்கின்ற அத்தகைய வேறு எவரேனும் ஆளின் சொத்துக்களும் பொறுப்புக்களும்.

**விளக்கக் குறிப்புக்கள்:**

1. தேவைப்படுத்தப்படும் விபரங்களைத் தருவதற்கு இப்படிவத்திலுள்ள நிரல்களுள் எதுவும் போதாமலிருக்குமானால் அத்தகைய விபரங்கள் தனியானதோர் அட்டவணையில் அல்லது அட்டவணைகளில் தரப்படலாம் : ஆயின், அத்தகைய எவையேனும் இணைக்கப்பட்ட அட்டவணைகள் பற்றி விபரத்திரட்டில் தோதான குறிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். அத்தகைய அட்டவணைகளும் உம்மால் கையொப்பமிடப்படல் வேண்டும்.

2. இப்படிவத்திலுள்ள எவையேனும் பிரிவுகளில் பதிவதற்கு விடயங்கள் எவையும் இல்லையெனில், தோதான வெற்றிடத்தில் ‘‘எதுவுமில்லை’’ எனத் தயவுசெய்து எழுதவும்.

## இணைப்பு II

| I | II |
|---|---|
| **சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்த வேண்டிய நபர்கள்** | **வெளிப்படுத்துதல்களை பெற்றுக்கொள்ளத் தகுதியானவர்கள்** |
| (அ) சனாதிபதி | இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு |
| (ஆ)பிரதமர், அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் அரசியலமைப்பின் உறுப்புரை 45 இன் கீழ் நியமனம் பெற்ற அமைச்சர்கள் | சனாதிபதி அவர்கள் |
| (இ)பாராளுமன்ற உறுப்பினர்கள் | சபாநாயகர் அவர்கள் |
| (ஈ)மாகாணங்களின் ஆளுநர்கள் | சனாதிபதி அவர்கள் |
| (உ)மாகாண சபைகளின் உறுப்பினர்கள் மற்றும் மாகாண பகிரங்க சேவையின் பணியாட்டொகுதி அலுவலர்கள்; | • ஆளுநர் (மாகாண சபைகளின் உறுப்பினர்கள்)<br>• மாகாண சபைகளின் அமைச்சுக்களுக்கு பொறுப்பான செயலாளர்கள் (பிரதம செயலாளர்)<br>• பிரதம செயலாளர் (பதவிநிலை அலுவலர்கள்) |
| (ஊ) உள்ளூர் அதிகாரசபைகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் பணியாட்டொகுதி அலுவலர்கள்; | • உள்ளூராட்சி சபைகளுக்கு பொறுப்பான அமைச்சர் (உள்ளூர் அதிகாரசபைகளின் உறுப்பினர்கள்)<br>• உள்ளூராட்சி சபைகளுக்கு பொறுப்பான அமைச்சின் செயலாளர் (மாநகர சபை ஆணையாளர்கள்,நகர சபை மற்றும் பிரதேச சபைகளின் செயலாளர்கள்)<br>• மாநகர சபை ஆணையாளர் (மாநகர சபையின் பதவி நிலை அலுவலர்கள்)<br>• நகர சபை செயலாளர் (நகர சபையின் பதவி நிலை அலுவலர்கள்)<br>• பிரதேச சபை செயலாளர் (பிரதேச சபையின் பதவி நிலை அலுவலர்கள்) |
| (எ) சனாதிபதியால் நியமிக்கப்பட்ட நீதிபதிகளும் பகிரங்க அலுவலர்களும்; | சனாதிபதி அவர்கள் |

| | |
|---|---|
| (ஏ) அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பகிரங்க அலுவலர்கள்; | குறித்த நிறுவனத் தலைவர்கள் |
| (ஐ) நீதிச் சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட நீதி அலுவலர்களும் அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்க அலுவலர்களும்; | நீதிச் சேவை ஆணைக்குழு செயலாளர் |
| (ஒ) அமைச்சுக்கள் மற்றும் அரசாங்கத் திணைக்களங்களிலுள்ள பணியாட்டொகுதி அலுவலர்கள்; | குறித்த நிறுவனத் தலைவர்கள் |
| (ஓ) அரசியலமைப்பின் 41அ (1) (உ) என்னும் உறுப்புரையின் நியதிகளின்படி நியமிக்கப்பட்ட, பாராளுமன்ற உறுப்பினர்களாகவிராத அரசிய லமைப்புப் பேரவையின் உறுப்பினர்கள்; | சனாதிபதி அவர்கள் |
| (ஔ) அரசியலமைப்பின் 41ஆ என்னும் உறுப்புரைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் ஆணைக்குழுக்களின், விடயத்துக்கேற்ப, தவிசாளர் களாக அல்லது உறுப்பினர்களாக நியமிக்கப்பட்ட ஆட்கள்; | சனாதிபதி அவர்கள் |
| (க) இலங்கை மத்திய வங்கி மற்றும் அரச வங்கிகளின் பணியாட்டொகுதி அலுவலர்கள்; | • மத்திய வங்கியின் ஆளுநர் (மத்திய வங்கியின் பதவி நிலை அலுவலர்கள்)<br>• குறித்த பொது முகாமையாளர் (அரச வங்கிகளின் பதவி நிலை அலுவலர்கள்) |
| (ங) அரசியலமைப்பின் 41அ (1) (இ) என்னும் உறுப்புரையின்கீழ் அல்லது ஏதேனும் நியதிச்சட்டத் தின்கீழ் தாபிக்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்களின் பணியாட்டொகுதி அலுவலர்கள்; | குறித்த நிறுவனத் தலைவர்கள் |
| (ச) ஏதேனும் நியதிச்சட்டத்தினால் அல்லது அதன்கீழ் தாபிக்கப்பட்ட சுயாதீன ஒழுங்குபடுத்துகை மற்றும் மேற்பார்வை ஆணைக்குழுக்களின் அல்லது குழுக் களின் தவிசாளர்கள், ஆணையாளர்கள், உறுப் பினர்கள் மற்றும் பணியாட்டொகுதி அலுவலர்கள்; | நியமன அதிகாரி |
| (ஞ) ஏதேனும் நியதிச்சட்டத்தினால் அல்லது அதன்கீழ் தாபிக்கப்பட்ட சபைகளின் தவிசாளர்கள், பணிப்பாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்று அலுவலர்கள்; | நியமன அதிகாரி |

| | |
|---|---|
| (ட) பாராளுமன்ற உறுப்பினர்களினதும், மாகாண சபைகளின் உறுப்பினர்களினதும் மற்றும் உள்ளூர் அதிகாரசபைகளின் உறுப்பினர்களினதும் தனிப்பட்ட பணியாட்டொகுதி உறுப்பினர்கள்; | நியமன அதிகாரி |
| (ண) (357 ஆம் அத்தியாயமான) தரைப்படைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஆட்சேர்க்கப்பட்டு பேணப்படும் இலங்கை தரைப்படையின் அலுவலர்கள்; | இராணுவ தளபதி |
| (த) (358 ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஆட்சேர்க்கப்பட்டு பேணப்படும் இலங்கை கடற்படையின் அலுவலர்கள்; | கடற்படைத் தளபதி |
| (ந) (359 ஆம் அத்தியாயமான) இலங்கை வான்படைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஆட்சேர்க்கப்பட்டு பேணப்படும் இலங்கை வான்படையின் ஆணைபெற்ற அலுவலர்கள்; | விமானப்படைத்தளபதி |
| (ப) 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் சட்டம், 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம், 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாணசபைகள் தேர்தல்கள் சட்டம், (262 ஆம் அத்தியாயமான) உள்‘ர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டம் அல்லது (138 ஆம் அத்தியாயமான) தொழிற் சங்கங்கள் கட்டளைச்சட்டம் என்பவற்றின் கீழான தேர்தல்களின் நோக்கங்களுக்காக ஏற்றங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளின் பதவிதாங்குநர்கள்; | தேர்தல்கள் ஆணையாளர் |
| (ம) (138 ஆம் அத்தியாயமான) தொழில் சங்கங்கள் கட்டளைச்சட்டத்தின்கீழ் பதிவுபெற்ற தொழிற்சங் கங்களின் நிறைவேற்றுனர்கள்; | தொழிலாளர் அமைச்சின் செயலாளர் |
| (ய) 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் சட்டம், 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம், 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டம் அல்லது (262 ஆம் அத்தியாயமான) உள்‘ர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம் என்பவற்றின்கீழ் நடைபெறவேண்டியுள்ள தேர்தல்களில் தேர்ந்தெடுக்கப்படுவதற்காக பெயர் குறித்து நியமிக்கப்பட்ட வேட்பாளர்கள்; | தேர்தல்கள் ஆணையாளர் |

| | |
|---|---|
| (ர) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் பதிவுபெற்றுள்ள எக்கம்பெனிகளில் இருபத்தைந்து சதவீதத்துக்குக் குறையாத பங்குகள் அரசினால் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றினால் வைத்திருக்கப்படு கின்றனவோ, அக்கம்பெனிகளின் தவிசாளர்கள், பணிப்பாளர்கள் மற்றும் பணியாட்டொகுதி அலுவலர்கள்; | கம்பனிகளின் பதிவாளர் |
| (ல) இச்சட்டத்தின் கருத்தெல்லைக்குள்ளான அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனங்களில் உள்ளடக்கப் பட்டனவாகவுள்ள நிதி நிறுவனங்களின் முகாமைத்துவ அல்லது மேற்பார்வைசார் வகிபாகங்களிலுள்ள பணியாட்டொகுதியினர்; | நிறுவனத் தலைவர்கள் |
| (வ) இலங்கை இராஜதந்திரத் தூதரகங்களின் தலைவர்கள்; | சனாதிபதி அவர்கள் |
| (அஅ) இலங்கை இராஜதந்திரத் தூதரகங்களுக்கு அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட அலுவலர்கள்; | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் |
| (ஆஆ) (180 ஆம் அத்தியாயமான) செய்தித்தாள் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் எந்த செய்தித்தாள்கள் தொடர்பில் வெளிப்படுத்துகைகள் செய்யப்பட்டுள்ள னவோ அந்த செய்தித்தாள்களின் தனியுரிமை யாளர்கள், பதிப்பாசிரியர்கள் மற்றும் பதிப்பாசிரியபீட பணியாட்டொகுதியின் உறுப்பினர்கள்; | வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளர் |
| (இஇ) 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கை தொலைத்தொடர்பாடல்கள் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் உரிமமளிக்கப்பட்ட ஊடகக் கம்பெனிகளின் தனியுரிமையாளர்கள், பதிப்பாசிரியர்கள் மற்றும் பதிப்பாசிரியபீட பணியாட்டொகுதி உறுப்பினர்கள்; | தொடர்பாடல் அமைச்சின் செயலாளர் |
| (ஈஈ) 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளை யாட்டுக்கள் சட்டத்தின் நியதிகளின்படி தாபிக்கப்பட்ட தேசிய விளையாட்டுக் கழகத்தின் பதவிதாங்குநர்கள்; அத்துடன் | விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் |

| | |
|---|---|
| (உ உ) வேறு அலுவலர்களின் அந்தந்த அலுவலகங்களில் அவர்கள் புரிகின்ற பணியின் தன்மையைக் கவனத் துட்கொண்டு, அத்தகைய அலுவலர்கள் இலஞ்சத்துக்கு அல்லது ஊழலுக்கு பலியாகக்கூடிய தன்மையைக் கருத்திலெடுப்பதன்மூலம் உயர் ஆபத்து வகுதிகளை ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு அலுவலர்களின் வகுதியினர். | இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் காலத்துக்கு காலம் விதந்துரைக்கும் அடிப்படையில் |

* வேறேதேனும் குறித்த சட்டத்தின் கீழான நியமங்களுக்கு ஏற்ப சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்த வேண்டிய நபர்கள்.

**இணைப்பு : III**

**சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்த வேண்டிய சந்தர்ப்பங்கள்**

| | |
|---|---|
| 01) முதலாவது நியமனம் கிடைக்கப் பெற்றபின்பு | நியமனம் பெற்று 3 மாத காலப்பகுதிக்குள் |
| 02) நியமனம் பெற்ற பின்பு | வருடாந்தம் |
| 03) ஓய்வு அல்லது பதவிக்கால நிறைவு | 14 நாட்களுக்குள் |
| 04) ஓய்வு பெற்ற பின்பு | வருடாந்தம் தொடரான 2 வருடங்கள் |
| 05) ரூபா 10 மில்லியனுக்கு அதிகமான சொத்தினை பெற்றுக் கொள்ளும் போது | ஒரு மாத காலப்பகுதிக்குள் |
| 06) தேர்தலில் பங்குபற்றும் அபேட்சகர்கள் | வேட்பு மனுக்களுடன் |

07) மேலுள்ள 01-06 வரையான வகுதியில் உள்ளடங்காத, வேறேதேனும் சட்டத்தின் கீழான நியமங்களுக்கு ஏற்ப சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்த வேண்டிய நபர்கள்.

**82 ஆவது பிரிவு**

(1) எந்த ஆளுக்கு இப்பாகம் ஏற்புடையதாகின்றதோ அந்த ஒவ்வொரு ஆளும், ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப் படக்கூடியவாறான படிவத்தில் -

(அ) (இதனகத்துப்பின்னர் “முதலாவது நியமன வெளிப்படுத்துகை” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) நியமனத் தேதியிலிருந்து மூன்று மாதங்களினுள்;

(ஆ) (இதனகத்துப்பின்னர் “ஆண்டு வெளிப்படுத்துகை” எனக்குறிப்பீடுசெய்யப்படும்) (3) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி ஆண்டுதோறும்;

(இ) (இதனகத்துப்பின்னர் “பதவிக்கால முடிவு அல்லது ஓய்வுபெறும் வெளிப்படுத்துகை” எனக்குறிப்பீடு செய்யப்படும்) விடயத்துக்கேற்ப அவரது தொழிற் காலத்தின் முடிவை அல்லது அவரது ஓய்வுபெறும் தேதியை அல்லது பதவியிலிருந்து நீக்கப்படும் தேதியை உடனடுத்துப்பின்னர் பதினான்கு நாட் காலப்பகுதியினுள்;

(ஈ) (இதனகத்துப்பின்னர் “ஓய்வுபெற்ற பின்னரான வெளிப்படுத்துகை” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (இ) என்னும் பந்தியின்கீழ் வெளிப்படுத்துகை செய்யப் பட்ட ஆண்டை உடனடுத்துப் பின்வரும் தொடர்ச்சி யான இரண்டு ஆண்டுகளில்;

(உ) (இதனகத்துப் பின்னர் “நிமித்த வெளிப்படுத்துகை” எனக் குறிப்பீடு செய்யப்படும்) பத்து மில்லியன் ரூபா தொகையினதான அல்லது பத்து மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்டதாக சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் பெறுமதியில் குறிப்பிடத்தக்க மாற்றமொன்று நிகழ்கின்றவிடத்து, அத்தகைய நிகழ்வுத் தேதியிலிருந்து ஒரு மாதத்தினுள்; அத்துடன்

(ஊ) விடயத்துக்கேற்ப, 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் சட்டம், 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம், 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைத் தேர்தல்கள் சட்டம் அல்லது (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் நியமனப் பத்திரங்கள் தேர்தல்களுக்காக சமர்ப்பிக்கப்படும் போது,

சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப்படுத்துகைகளைச் செய்தல் வேண்டும்

(2) ஆளொருவர், நியமிக்கப்பட்ட தேதியன்று எவ்வாளுக்கு இப்பாகம் ஏற்புடையதாகின்றதோ அந்த ஆளொருவராக விராதவிடத்து, அவர், எத்தேதியன்று எவ்வாளுக்கு இப்பாகம் ஏற்புடையதாகின்றதோ அவ்வாள் ஒருவராக அவர் வருகின்ற அத்தேதியிலிருந்து மூன்று மாதங்களினுள், அத்தகைய ஆள் எத்தேதியன்று எவ்வாளுக்கு இப்பாகம் ஏற்புடையதாகின்றதோ அவ்வாள் ஒருவராக வருகின்ற அத்தேதியன்றுள்ளவாறு சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப்படுத்துகை யொன்றைச் செய்தல் வேண்டும்:

ஆயின், 80 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ய) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு எந்த ஆளுக்கு இப்பாகம் ஏற்புடையதாகின்றதோ அந்த ஆள் ஒருவர் தேர்தல் தேதியை வெளிப்படுத்தி இயைபான சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட வெளிப்படுத்துகைத் தேதி வரையான காலப்பகுதிவரை அவரது வெளிப்படுத்துகையை சமர்ப்பித்தல் வேண்டும்.

(3) ஓராம் அல்லது (2) ஆம் உட்பிரிவின் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் முதலாவது வெளிப்படுத்துகையைச் செய்யுமாறு தேவைப்படுத்தப்படுகின்ற ஒவ்வோர் ஆளும், அத்தகைய ஆள் இப்பாகம் ஏற்புடையதாகும் ஆளாக இல்லாதொழிந்தாலன்றி, ஒவ்வோர் ஆண்டிலும் மார்ச்சு முப்பத்தோராம் நாளன்றுள்ளவாறான அவரது சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் வெளிப்படுத்துகையொன்றை ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான படிவத்தில் ஒவ்வொரு ஆண்டின் யூன் முப்பதாம் நாளளவில் செய்தல் வேண்டும் என்பதுடன் இப்பாகத்தின் கீழ் எத்தேதியன்று அவரது சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப்படுத்துகையொன்றைச் செய்வதற்கு அவர் முதலில் தேவைப்படுத்தப்பட்டாரோ அத்தேதியில் அவர் வைத்திருந்த சொத்துக்களையும் பொறுப்புக்களையும் அத்தகைய வெளிப்படுத்துகையில் உள்ளடக்குதலும் வேண்டும்:

ஆயின், (2)ஆம் உட்பிரிவின்கீழ், சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் வெளிப்படுத்துகையொன்றைச் செய்யுமாறு தேவைப்படுத்தப்பட்ட ஆள் ஒருவர், ஏதேனும் ஆண்டின் மார்ச்சு முப்பத்தோராம் நாளுக்கு முற்போந்த ஆறு மாதங்களினுள் ஏதேனும் தேதியிலுள்ளவாறாக முதலாவது வெளிப்படுத்துகையை செய்துள்ளவிடத்து, அவர், (1) ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட குறிப்பிடத்தக்க மாற்றமொன்று அவரது சொத்துக்களிலும் பொறுப்புக்களிலும் நிகழ்கின்றவிடத்து, நிமித்த வெளிப்படுத்துகை தவிர்ந்த வேறொரு வெளிப்படுத்துகையை அத்தகைய ஆண்டிற்கு செய்யுமாறு தேவைப்படுத்தப்படுதலாகாது.